# தோரணம்
# Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newsletter

ஓலை - 1 | புரட்டாதி 2016 | தோரணம் - 8


## வேறென்ன வேண்டும் எனக்கு!

அருவமாய் உருவமாகி

அருவுருவமாய் அநாதியான

தில்லைச் சிற்சபேசனே!

ஊழின் வலிமையை பிறப்பின்

வழி உணர்த்திய என் சிவனே!

கடுமிடர்களை நீ தந்தாலும்

கொடுபிணிகளைால் எனை வதைத்தாலும்

ஓம் நமசிவாய மந்திரத்தை

அனுதினமும் சிவ சிவா எனவோதி
சித்தத்துள் உனையிருத்தி

சிந்திப்பதே அல்லாமல்

வேறென்ன வேண்டுமெனக்கு!

-வை.சிவனருட்செல்வர்


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர் | வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்

Sai-

Tel /

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
**va Munnetta Sangam (UK)**
*Salisbury Road, Manor Park, London E12 6AB.*
Fax: 020 8514 4732   Fax: 01268 5618
**Registered Charity No: 292085**
www.saivamunnettasangam.com   email: smsukinfo@gmail.com




# ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்

## நவராத்திரி விரதத் திருவிழா அழைப்பிதழ்

**அன்புடையீர்**

எதிர்வரும் நவராத்திரி விரதத் தினங்கள் எங்கள் சங்க சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விரத வழிபாட்டின் போது அம்பாள் சகஸ்ரநாம அர்ச்சனையும், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். உங்களனைவரையும் இப்புண்ணிய வழி-பாட்டில் கலந்து அன்னை பராசக்தியின் திருவருள் பெற்று மனக்கவலை அகற்றி அமைதியான நல் வாழ்க்கை தொடர பிரார்த்திக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:** எமது சங்க அருள்மிகு நடராஜர் சந்நிதி
2 Salisbury Road Manor Park London E12 6AB

**காலம்:** நிகழும் மன்மத ஆண்டு புரட்டாதி மாதம் 16ஆம் நாள்
**சனிக்கிழமை 01.10.2016 மாலை 6.30 மணி முதல்**

6.30 மணிக்கு அம்பாள் சகஸ்ரநாம அர்ச்சனை
7.00 மணிக்கு பூசை

8.00 மணிக்கு கலை நிகழ்ச்சி

8.48 மணிக்கு அர்ச்சனையும் பிரசாதம் வழங்கலும்

| திகதி | நாள் | உபயம் |
|---|---|---|
| 01.10.2016 | சனிக்கிழமை | **திரு. செ. திருமதி. கா. சூரியகுமார் குடும்பம்** |
| 02.10.:.2016 | ஞாயிற்றுக்கிழமை | **திரு. அ. திருமதி. சே. ஸ்ரீதரன் குடும்பம** |
| 03.10.2016 | திங்கட்கிழமை | **நால்வர் தமிழ்க் கலை நிலைய சங்கீத வயலின் வகுப்பு மாணவர்கள்** |
| 04.10.2016 | செவ்வாய்க்கிழமை | **நால்வர் தமிழ்க் கலை நிலைய வீணை வகுப்பு மாணவர்கள்** |
| 05.10.2016 | புதன்கிழமை | **நால்வர் தமிழ்க் கலை நிலைய நடன வகுப்பு மாணவர்கள்** |
| 06.10.2016 | வியாழக்கிழமை | **திரு. மா. திருமதி. க. யசோதரன் குடும்பம்** |
| 07.10.2016 | வெள்ளிக்கிழமை | **திரு. செ. திருமதி. மா. தனபாலசிங்கம் குடும்பம்** |
| 08.10.2016 | சனிக்கிழமை | **திரு. மா. திருமதி. வ. ரவீந்திரதாஸ் குடும்பம்** |
| 09.10.2016 | ஞாயிற்றுக்கிழமை | **திரு. சி. திருமதி. ம. சிவானந்தராஜா குடும்பம்** |
| 10.10.2016 | திங்கட்கிழமை | **திருமதி. வா. பாலகிருஷ்ணன் குடும்பம்** |
| 11.10.2016 | செவ்வாய்க்கிழமை | **நால்வர் தமிழ்க் கலை நிலைய தமிழ் வகுப்பு மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள்** |

**வித்தியாரம்பம்** எங்கள் சங்க ஆலயத்தில் - 02085144732, வீணை ஆசிரியரிடம் - 07886591710, மிருதங்க ஆசிரியரிடம் - 07711044509, நடன ஆசிரியரிடம் - 07949763821, சங்கீத /வயலின் ஆசிரியரிடம் - 07903889839 வித்தியாரம்பம் செய்து கொள்ளலாம்

**குறிப்பு:** நவராத்திரி தினங்களில் ஆலயப் பூசை மாலை 7.00 மணிக்கு நடைபெறும்.

மா. இந்துசேகரன்
கௌரவ பொதுச் செயலாளர்

மா. ரவீந்திரதாஸ்
கௌரவ சமயச் செயலாளர்

## பெரிய புராணம் (சொற்பொழிவுகள்)

***சைவ முன்னேற்ற சங்கம் கடந்த 05-06-2016 அன்று தொடக்கம் எமது அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேதர சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமை தோறும் மாலை 8.00 மணியளவில் நடைபெறும் பெரியபுராணச் சொற்பொழிவுகளை (ஒளிப்பதிவு செய்யப்பட்ட) இந்த இதழ்மூலம் தொடர்ந்து வாசகர்கள் கேட்டு அறிவதற்கு தர இருக்கிறோம். கீழேயுள்ள U-tube ஐ அழுத்துவதன்மூலம் கேட்கலாம்***




**பெரிய புராணத் தொடரை இலண்டன் முருகன் கோவில் பிரதம குருக்கள் கைலை நாகநாதசிவம் அவர்கள் ஆரம்பித்து வைத்து ஆற்றும் உரை**



**ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த**

**வசந்த குருக்கள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைப் பற்றி ஆற்றும் உரை**



**சுந்தர மூர்த்தி நாயனாரைப் பற்றி**

**திரு.ஜெகதீஸ்வரன்பிள்ளை ஆற்றும் உரை**

**மலையகத்திலிருந்து திறமைமிக்க மாணவர்களைத் தெரிவுசெய்து யாழ்பாணம் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகிய பாட-சாலைகளில் எமது சங்கத்தின் ஆதரவுடனும் உயர்தர வகுப்புகளில் பயிலும் மாணவர்களை கீழே காண்கிறீர்கள்**



## ஆவணி சதுர்த்தசித் திதி

## நடேசர் அபிஷேகம்

**15-09-2016 அன்று வியாழக்கிழமை மாலை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.**





## ஆலய சங்க நிகழ்வுகள்



| | | |
|---|---|---|
| 01-10-2016 | சனி | நவராத்திரி விரதம் ஆரம்பம் <br> Navarathiri 1st day |
| 10-10-2016 | திங்கள் | நவராத்திரி விரதம் ஒன்பதாம் நாள் <br> Navarathitri 9th day |
| 11-10-2016 | செவ்வாய் | கேதாரகௌரி விரதம் ஆரம்பம் <br> Gowri viratham 1st day |
| 22-10-2016 | சனி | சங்க 39வது ஆண்டு நிறைவு விழா <br> SMS 39th anniversary celebration |
| 29-10-2016 | சனி | தீபாவளித் திருநாள் Deepavali |
| 30-10-2016 | ஞாயிறு | கேதார கௌரி விரதம் பூர்த்தி Gowry viratham 20th day |
| 31-10-2016 | திங்கள் | ஷஷ்டி விரதம் ஆரம்பம் Skandashasti viratham 1st day |

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## Saiva Munnetta Sangam (UK)

***"Community Service Through Saiva (Hindu) Concern"***


Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel / Fax: 020 8514 4732 Fax: 01268 561805

www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com


Registered Charity No: 292085

## எமது சேவைகள்

அருள்மிகு சிதம்பரேஸ்வர ஆலயம்
கலசம் காலாண்டிதழ்
தோரணம் மாதாந்த மின்னிதழ்
நால்வர் தமிழ்ப் பாடசாலை

நால்வர் மூத்தோர் நிலையம்
யோகா நிலையம்

சைவ சமயப் பரீட்சைகள்
கலை வகுப்புகள்
நால்வர் கோட்டம்
இறுதிக் கிரியைகள்

"The great secret of true success, of true happiness, is this: the man or woman who asks for no return, the perfectly unselfish person, is the most successful."
— Swami Vivekananda

# அகவை - 70 இராமநாதன்

## வாழ்க நீவிர் பல்லாண்டு இனிய நல்லாளுடன்



எம் பெருமான் நாதனை இராமபிரானும் வணங்கியதாலோ என்னவோ , தங்களின் பெற்றோர் தங்களுக்கு இராமநாதனென பெயர் சூ ட்டினார்களோ? தெரியவில்லை. பெயர் வைத்த நோக்கம் எமக்கு தேவையில்லை. சைவசமயத்தை வளர்த்தெடுக்க அந்த இளம் வயதில் முயற்சியெடுத்தீரகளே! அதற்காக நீவிர் வாழ்க!. எல்லோர்க்கும் நோக்கம் எதுவெதுவோ வெளிநாட்டில் உண்டு. உமக்கு மட்டும் அவ்வயதில் அந்நோக்கம் வர வைத்த அந்த இறைநாதனை வணங்குவோம். அதுவும் ஓர் இறையருளே! அந்தப் புனிதச் செயல்தான் சைவ முன்னேற்றச் சங்கம். சை.மு.சங்கத்திற்கு இன்று 39 வயது. ஆரம்பித்து வைத்த இராமநாதனுக்கோ அன்று 31 வயது. அந்த ஒரு நற்செயலை அன்று ஆரம்பித்து வைத்ததாலே அதன் செயல்கள் இன்று வரை வளர்ந்து ஆலமரம்போல் சிறுகிளைகளைப் பரப்பி ஆலயம், தமிழ்ப் பாடசாலை, நடனப் பள்ளிகள், கலசம், தோரணம் என சமயப் பத்திரிகைகள் போன்ற எமது தமிழ்ப்பிள்ளைகளுக்கு சமயப்பற்றையும் மொழிப்பயிற்சியையும் கொடுத்து வருகின்றன. எதை எப்பொழுது எவ்வாறு செய்யவேண்டும் என்பதை இறைவன் ஒருவனே நிர்ணயிக்கிறான். ஆகவே உங்களுக்கு அவன் அளித்த பங்கை நீங்கள் செய்கிறீர்கள். அந்த இறைநாதன் உள்ளிருந்து சொல்வதை இந்த இராமநாதன்மூலம் செய்விக்கிறான்போலும். அவ்வளவுதான். சிதம்பரம் சென்று தில்லையம்பலத்தானைத் தரிசிக்க முடியாதவர்களை இங்கே வாருங்கள், இங்கே அந்த ஆடற்தலைவன் இருக்கிறான் என்று, எம்மக்கள் அவனை வணங்க சங்கத்தில் ஆலயம் அமைத்து தரிசிக்க வழிசமைத்த நீங்களும் தங்களின் இனிய நல்லாளுடன் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தொண்டுகள் பல புரிய 'தோரணம்' வாழ்த்துகிறது.

'வளர்க நும் பணி'




கொழும்பு சைவ முன்னேற்ற சங்கத்தில் நடைபெற்ற திரு. இராமநாதன் அவர்களின் 70 வது பிறந்த நாள் விழா-வின்போது

# அறிவொளிவளையம்

# *Enlightment Circle*

# *Saiva munnettta sangam*

**Life Line Program for war victims in**

After the war, there are number of people living in Sri Lanka are struggling for their day-to-day living. Yoga team with the help of well-wishers is providing number of assistance for these people to effectively manage their day-to-day life as smooth as possible.









Our special thanks go to Mrs Masilamany Thambimuthu for her invaluable contribution towards this support to fellow human beings who are in need of help.

We have donated a water pump to Mr. S Ratnavel a disabled war victim who is living with his mother and looking after her in her old

***"life and death, Joy and sorrow, gain and loss; these dualities cannot be avoided. Learn to accept what you cannot change"***

**Our sincere thanks to the yoga team**






Our sincere thanks to the yoga team

Our aim is to serve at least 2,500 meals to hungry stomachs during 2016; that are in need of the basic necessities in life. Up to now we have served over 2,100 meals.



These elders are need in help




| | | Jan'16 | Feb'16 | Mar'16 | Apr'16 | May'16 | Jun'16 | Jul'16 | Aug'16 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Plan | 0 | 100 | 300 | 500 | 800 | 1100 | 1300 | 1620 | 1920 |
| Actual | 0 | 80 | 270 | 460 | 770 | 1330 | 1530 | 1830 | 2150 |

Our special thanks to

Mrs A Gunarajah for her invaluable contribution to this initiative during this special meal for the Adi Amavasi day.

How many of you would want to be part of this mission in feeding the hungry people in the world???

***"One man may read the Bhagavata by the light of a lamp, and another may commit a forgery by that very light; but the lamp is unaffected. The sun sheds its light on the wicked as well as on the virtuous."***

***-Saying of Sri Ramakrishna***

# பிறந்தநாள் வாழ்த்து

சைவ முன்னேற்ற சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும் தற்போதைய சங்கத்தின் பொருளாளருமாகிய திரு. சோ. நிரஞ்சன் அவர்களின் பிறந்த நாள் விழாவை எமது சங்கத்தின் மூத்தோர் நிலையத்தினர் கடந்த 29-08-2016 அன்று திங்கட்கிழமை நால்வர் மணிமண்டபத்தில் சிறப்பாக நடத்தினார்கள். அவருக்கும் அவரது மனைவி பிள்ளைளுக்கும் சங்கத்தினரின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



எங்கள் சங்கத்தில் இளையவன் நீ!

எவ்வாறோ இங்கு வந்து எமது சங்கம் வளர்ந்திடவே

உன்னால் முடிந்ததை உவந்து

செய்கின்றாய் நீ!

இன்னும் பல சேவைகளை இயைந்து நீ புரிந்திடவே

இறைவனைத்தான் நாம்
வேண்டி இன்னும் பல ஆண்டுகள்

இனியாளுடன் நீ வாழ வாழ்த்துகிறது "தோரணமே"



மூத்தோர் நிலையத்தாருடன் பிறந்த நாள் கொண்டாடும் திரு.திருமதி நிரஞ்சன் குடும்பத்தினர்

# கற்பக விநாயகர் ஆலயம்

வோல்தம்ஸ்ரோ



# தேர்த் திருவிழா

28-08-2016







Holland நாட்டில் உள்ள Denhelder என்ற ஊரில் உள்ள வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு 25வது வருட நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற பட்டிமன்றத்தில் இலண்டன் சைவமுன்னேற்றசசங்கத்தின் ஸ்தாபகர் திரு.வ.இராமநாதன் நடுவராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.








Holland நாட்டின் தலைநகரமான Amesterdam இல் உள்ள அருணாலேஸ்வர ஆலயத்தின் உள்ளே எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைக் கீழே காணலாம்.



# அகவை - 80

## ஆயிரம் பிறை கண்ட அன்னை சிவப்பணிச் செல்வி

## திருமதி இந்திரா சிவயோகம்

தமிழர்களுடைய வழக்கப்படி 80 வயது நிரம்பியவர்களை யெல்லாம் ஆயிரம் பிறைகளை கண்டவர்கள் என்றும் அவர்களை வாழ்த்துவதும் எமது பண்பாட்டில் வழக்கமாக இருந்து வந்துள்ளது. அவரகளிடம் ஆசி பெறுவதையும் தமிழர்கள் பெரும்பேறாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். கடந்த ஜூன் மாதம் 26ம் திகதி ஸ்டோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் அவரது 80ஆவது அகவையையொட்டி அவரை வழுத்துவதற்கு ஒரு சிறப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்றைய நிகழ்சி தொடர்பான ஒளிப்பதிவுகளை கீழே பதிவு செய்கிறோம். அம்மையாரின் சைவசமயப் பணிகள் மேலும் தொடர வாழ்த்துகிறோம்.








கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு திரு. இராமநாதன் அவர்கள் நால்வர் சிலைகளை வழங்கும் வைபவம்

## சிவா ~ விஷ்ணு கோயில் மெல்பேர்ண் ~ அவுஸ்ரேலியா



"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
Salisbury Road, Manor Park, London E12 6AB.
020 8514 4732
**Registered Charity No: 292085**
www.saivamunnettasangam.com email: smsukinfo@gmail.com

:

# அமரர் செல்லத்துரை செல்வராஜா அவர்களுக்கு எமது அஞ்சலிகள்

**02.06.1950**



**11.09.2016**

வாழ்வதும் மறைவதும் மண்ணுயிரின் இயல்பு
வாழ்விப்பதும் சாதிப்பதும் மானிடத்தின் சிறப்பு
சூழ்ந்த இனத்தின் துயர்துடைத்த செல்வா -நின்
ஆழ்ந்த உறக்கத்தில் அமைதி நிலைக்கட்டும்.

Ilford ஸ்ரீசெல்வவிநாயகர் ஆலய நிறுவனரும், எங்கள் சங்க அன்பருமான

## திரு. செல்லத்துரை செல்வராஜா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திக்கிறோம். அவரின் மனைவி, சகோதரி, பிள்ளைகள். மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி